# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1717/14 - 2011 අගෝස්තු 03 වැනි බදාදා - 2011.08.03

*1717/14 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பீ 24/51*

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகன சட்டம்**

(203ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகன சட்டத்தின் 237ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 141, 143, 144, 168 மற்றும் 190 ஆம் பிரிவுகளின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

குமார வெல்கம,
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
2011 ஓகத்து 01.

ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2011 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, மோட்டார் வாகன (கடுகதிப்பாதை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள் 2008 ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, தேசிய பொதுவழிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட எல்லாக் கடுகதிப்பாதைகளுக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

3. ஆளெவரும், கடுகதிப்பாதையில், இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் ஏதேனும் வகுப்புக்களைச் சேர்ந்த மோட்டார் வாகனத்தை ஓட்டுதலோ அல்லது பாவித்தலோ ஆகாது.

4. ஆளெவரும் கடுகதிப்பாதையில் ஏதேனும் விசேட நோக்கத்தைக் கொண்ட வாகனத்தை ஓட்டுதலோ அல்லது பாவித்தலோ ஆகாது.

ஆயின் எவ்வாறாயினும், விசேட நோக்கத்தைக்கொண்ட வாகனம் கடுகதிப்பாதையின் பராமரிப்பு தொடர்புபட்ட ஏதேனும் செயற்பாட்டினைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமாகவுள்ளவிடத்து, ஏதேனும் அத்தகைய விசேட நோக்கத்தைக் கொண்ட வாகனத்தின் பாவனைக்கென மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதியினால் விசேட அனுமதி வழங்கப்படலாம்.

5. ஆளெவரும் கடுகதிவீதியில் ஏதேனும் மோட்டார் சைக்கிளை ஓட்டுதலோ அல்லது பாவித்தலோ ஆகாது.

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய நோக்கத்திற்கெனப் பிரத்தியேகமாக பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் தாபிக்கப்பட்ட பொலிசுப் பிரிவுகளில் கடுகதிப்பாதையில் ரோந்து சேவைக்கெனப் பயன்படுத்தப்படும் மோட்டார் சைக்கிள்கள் கடுகதிப்பாதையில் ஓட்டப்படலாம் அல்லது பயன்படுத்தப்படலாம்.

*6.* ஆளெவரும், இவ்வொழுங்குவிதிகளின் அல்லது கடுகதிப்பாதைகள் தொடர்பான ஏதேனும் இயைபான எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி அவர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள ஏதேனும் குறிப்பிட்ட செயற்பாடுகளைக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக, கடுகதிப்பாதையில் அல்லது அதன் ஏதேனும் பாகமொன்றில் பிரவேசிப்பதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு விடயத்துக்கேற்ப, மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தலைமையதிபதியினால், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அல்லது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வேறுவகையில் விசேடமாக அதிகாரமளிக்கப் பட்டிருந்தாலொழிய, கடுகதிப்பாதை அல்லது அதன் ஏதேனும் பாகமொன்றில் பிரவேசித்தலோ அல்லது பயன்படுத்துதலோ ஆகாது.

*7.* ஆளெவரும் கடுகதிப்பாதையில் மோட்டார் வாகனமொன்றை மணித்தியாலயத்திற்கு நூறு (100) கிலோ மீற்றர் வேக வரையறையை மீறி ஓட்டுதலாகாது.

*8.* பழகுநர் அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் ஆளெவரும், கடுகதிப்பாதையில், ''எல்'' தகட்டினைப் பொருத்திய ஏதேனும் மோட்டார் வாகனத்தை ஓட்டுதலோ அல்லது பயன்படுத்துதலோ ஆகாது.

*9.* கடுகதிப்பாதையில், ஏதேனும் ஓரிடத்தில் விபத்தொன்று அல்லது செயலிழத்தலொன்று ஏற்படும்பட்சத்தில், சாரதி கடுகதிப்பாதையின் ஏனைய பயன்படுத்துநர்களுக்குப் போதிய அறிவித்தலை வழங்கும் நோக்கில் வாகனத்தின் பிரதிபலிக்கின்ற முக்கோண எச்சரிக்கை உபாயம் மற்றும் ஆபத்து விளக்கை வெளிக்காட்டத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

*10.* சாரதி எவரும், அத்தகைய சாரதியினால் பயன்படுத்தப்படும் வாகனம், தொடர்பில் பதிவுச்சான்றிதழில் குறித்துரைக்கப்பட்டவாறாக வாகனத்தின் ஆகக்கூடிய வெற்று எடை வரையறைகளை அல்லது முழுமொத்த வாகன எடையை விஞ்சுமாயின் ஏதேனும் கடுகதிப்பாதையில் அல்லது அத்தகைய கடுகதிப்பாதையின் ஏதேனும் பாகத்தில் பிரவேசித்தலோ அல்லது பயன்படுத்துதலோ ஆகாது.

*11.* சாரதி எவரும், மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழான ஒழுங்குவிதிகளினால் குறித்துரைக்கப்பட்ட பரிமாணங்களின் ஆகக்கூடிய வரையறைகளை விஞ்சுவதாக கடுகதிப்பாதையில் பிரவேசித்தலோ அல்லது பயன்படுத்துதலோ ஆகாது.

*12.* கடுகதிப்பாதையில் பிரவேசித்துள்ள ஆளெவரும், 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, தேசிய பொதுவழிகள் சட்டத்தின் 83 ஆம் பிரிவின் நியதிகளின்படியும் அப்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கெனவும் அத்தகைய கடுகதிப்பாதையில் அடையாளக் குறியிடப்பட்ட தரிப்பிடமொன்று தவிர்ந்த இடமொன்றில் அத்தகைய ஆள் ஓட்டுகின்ற வாகனத்தை தரித்துவைத்தலோ அல்லது நிறுத்திவைத்தலோ ஆகாது. இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள், அத்தகைய சட்டத்தின் நியதிகளின்படி, தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*13.* இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

**அட்டவணை**

(ஒழுங்குவிதி 3)

1. மோட்டார் முச்சக்கரவண்டி
2. மோட்டார் முச்சக்கரவண்டி வான்
3. கமத்தொழில் நில வாகனம்
4. கை உழவுயந்திரம்
5. பிணியாளர் வண்டிகள்
6. நீராவியினால் உந்தப்பட்ட மோட்டார் வாகனங்கள்.

8-457

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.